## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 79/2018

நாள்: 24.02.2026

பெயர்: சிவநேசன் (வா.சா.2) த/பெ: ரங்கநாதன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1. வழக்கு சொத்து இருக்கும் கிராமத்தில் எனக்கு ஏதும் சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த வாதியின் அப்பாவை எனக்கு தெரியும் என்றால் தெரியும். வாதியின் அப்பா தற்போது உயிரோடு தான் உள்ளார். வாதியின் தகப்பானார் பெயர் லாரன்ஸ் ஆகும். தாவா சொத்து இருக்கும் இடம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அந்த இடத்தை பார்த்து சுமார் பத்து வருடங்கள் ஆகும். வா.சா.ஆ.1 ல் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அதில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் 2 அயிட்ட சொத்துக்கள் உள்ளன. என்னுடன் சேர்த்து சாட்சி கையெழுத்து போட்ட நபரின் பெயர் தொன்போஸ்கோ இருதய ராஜ். **வா.சா.ஆ.1** ஏற்படும் போது அதன் தாய் பத்திரம் நான் பார்த்தேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. வேற ஆதரவுகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் சிட்டா பட்டா பார்த்தேன். பட்டாவிலும் சிட்டாவிலும் 4ஆம் பிரதிவாதியின் பெயர் இருந்ததா என்றால் பெயர் இருந்தது ஆனால் யார் பெயர் என்று நினைவில் இல்லை. தாவா சொத்துக்கள் குறித்து சர்வே எண்கள் தெரியும் நான்கெல்லை விபரம் தெரியாது.

2. என்னை **வா.சா.ஆ.1** ற்க்கு சாட்சி கையெழுத்து போடுவதற்கு வாதியின் தந்தை தான் அழைத்து வந்தார். நான் வேறு ஊரை சேர்ந்தவர். எனக்கு வாதியின் தகப்பனாரை எவ்வாறு தெரியும் என்றால் சாமிநாதன் என்பவரால் பழக்கம் ஏற்பட்டது. எனக்கு தாவா சொத்தின அனுபவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் **வா.சா.ஆ.1** ஏற்படுவதற்கு நான் உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் **வா.சா.ஆ.1**ல் சாட்சி கையெழுத்து போட்டதால் வாதிக்கு

ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சிவநேசன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/–S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்